இன்றியமையாத பொருட்கள் மக்களுக்கு நியாயமான விலையில் கிடைப்பதற்கு அரசு அப்பொருள்களை வாங்குவதற்காகச் செய்யும் கூடுதல் செலவு இக்கோரிக்கையில் அடங்கியுள்ளது.

இந்த துணை மதிப்பீடுகளில் கண்டுள்ள ஏனைய செலவினங்கள் பற்றி, விரிவான அறிக்கையில் கொடுத்த குறிப்புகளுக்கு மேல் சிறப்பான விளக்கம் எதுவும் தேவையில்லை என்று கூறி, இத் துணை மதிப்பீடுகளை இம் மாமன்றம் ஏற்று இசைவு அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

(4) அரசினர் தீர்மானம்

பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"தமிழ் நாடு சட்டப் பேரவை நடைமுறை விதி 21 (3)-ன் கீழ், இன்றைய நிகழ்ச்சி நிரலில் 4-வது வரிசை எண் உள்ள மானிய கோரிக்கைகளில் மானிய கோரிக்கை எண். 18-ல் "கால்நடை வளர்ப்பு" என்ற தலைப்பின்கீழ் உள்ள மானிய கோரிக்கையை முதலாவதாக எடுத்துக் கொள்ள வேண்டும்" என்ற தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(5) 1972–73-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) நிதிக் கோரிக்கை எண் 18—கால்நடை வளர்ப்பு

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல்

"நிதிக் கோரிக்கை எண் 18—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,40,59,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்"

என்ற கோரிக்கையை நான் முன்மொழிகிறேன்.

THIRU B. VENKATASWAMY : Sir, I move the following cut motion to discuss about the need to increase the number of Poultry Farms in Tamil Nadu :—

'That the allotment of Rs. 4,40,59,700 under Demand No. 18-Animal Husbandry be reduced by Rs. 100.